## JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU

## CC No. 258/2019

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW-1 |
| Name | : Lakshmanan |
| Father/Husband's Name | : Pillai |
| Village | : Mudichur |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07.08.2024.

**குறுக்கு விசாரணை**

நான் வீட்டிலிருந்து வருகிறேன். நான் எந்த வேலையும் செய்யவில்லை. நான் இதற்கு முன்பாக தனியார் ஹோட்டலில் வேலை பார்த்தேன். நான் வேலை பார்த்த சமயத்தில் எனக்கு மாதம் ரூ.30,000/- சம்பளம். இந்த வழக்கு புகாரில் நான் ரூ.30,000/- சம்பளம் வாங்கியதை பற்றி சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் 2002ல் பணி ஓய்வு பெற்றுவிட்டேன். நான் நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவர். தற்பொழுது என் பெயரில் அசையா சொத்துக்கள் எதுவும் இல்லை. ஆஜார் எதிரிக்கு நான் இரண்டு தவணையாக பணம் கொடுத்தேன். முதலில் ரூ.2,00,000/- அதன் பிறகு ரூ.1,00,000/-ஐ கடனாக கொடுத்தேன். என்னுடைய முதன்மை சாட்சியத்திலும் இதனை பற்றி சொல்லியுள்ளேன். நான் வைத்தியநாதன் என்பவர் மீது இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த வழக்கு முடிந்துவிட்டது. நானும், அவரும் சமரசமான

வழக்கினை ரூ.3,00,000/-க்கு முடித்துக்கொண்டோம். ஆஜர் எதிரி என்னிடம் பெற்ற ரூ.2,00,000/-த்திற்கு பாண்ட் எழுதி கொடுத்தார் ரூ.1,00,000/-த்திற்கு பாண்ட் எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை. தங்கமணி என்பவரை எனக்கு தெரியும். அவரின் மூலமாக தான் ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். ஆஜர் எதிரி காசோலையில் ரூ.3,00,000/- என பூர்த்தி செய்து கையொப்பமிட்டு கொடுத்தார். காசோலை கொடுத்த அதே நாளில் தான் கையொப்பமும் ரூ.3,00,000/-யும் பூர்த்தி செய்து கொடுத்தார். காசோலையில் உள்ள கையொப்பமும், ரூ.3,00,000/- என பூர்த்தி செய்யப்பட்டுள்ள விவரம் வெவ்வேறு பேனாவினால் எழுதப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. நான் வட்டி தொழில் எதுவும் செய்து வரவில்லை. மேற்படி தொகையினை நான் 3சதவீதம் வட்டிக்கு கொடுத்தேன். வட்டிக்கு பணம் கொடுப்பதாக இருந்தால் அரசாங்க உரிமம் பெற்றிருக்க வேண்டும் என்றால் சரிதான். 3 சதவீதம் வட்டி என்பது அரசாங்கம் நிர்ணயித்துள்ள வட்டியைவிட அதிகமான தொகை என்றும் அதனால் என்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படலாம் என்றால் சரியல்ல. நான் 3 சதவீதம் வட்டிக்கு கொடுத்தேன், ஆனால் அவர் இதுவரை எந்த பணமும் தரவில்லை. நான் இந்த வழக்கினை வட்டித் தொகையினை கேட்டு தாக்கல் செய்யவில்லை. அசல் தொகை ரூ.3,00,000/- த்திற்காக நான் வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் எதிரிக்கு நான் ரூ.2,00,000/- கடன் கொடுத்துள்ளேன் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். எதிரி காசோலையை என் பெயரில் கொடுத்தார். நான் ரூ.3,00,000/-த்திற்கு தான் வழக்கை தாக்கல் செய்துள்ளேன். 09.02.2016ம் ஆண்டு எதிரி என்னிடம் பணம் வாங்கினார். எதிரி என்னிடம் 2017ம் ஆண்டே வாங்கிய கடனை திருப்பி தந்துவிட்டார் என்றும், செக்கியூரிட்டிக்காக என்னிடம் கொடுத்த காசோலையை நான் தவறுதலாக பயன்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துவிட்டேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு, இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றும், அதிக தொகை பெறுவதற்காக இந்த பொய்யான வழக்கை தாக்கல்

செய்துள்ளேன் என்றால் சரியல்ல. காசோலை கொடுத்த சமயத்தில் தங்கமணி மற்றும் வைத்தியநாதன் இருந்தார்கள். மேற்படி நபர்களுக்கு காசோலையின் விவரம் தெரியும். அவர்களை நீதிமன்றத்தில் சாட்சியாக அளித்தால், அவர்கள் மேற்படி காசோலையைப் பற்றி கூறுவார்கள்.

sd/-xx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-R.D. Aarthi,
Judicial Magistrate No.II,
Chengalpattu.